Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3, No.2, 2022, (1-7).

# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் ‘வேர்ட்வால்’ பயன்பாடு

## The Usage of Wordwall in Teaching and Learning Tamil

**Saraswathy Annamalay**[1]
SJK (T) Ladang Batak Rabit,
Teluk Intan, Perak, MALAYSIA
sraswathy75@gmail.com

**Perumal Kittusamy**[2]
Tamil University, Thanjavur, INDIA
drperumalkittusamy@gmail.com

**Logeswary Arumugum**[3]
SMK Pokok Sena, Penang,MALAYSIA
artkls@yahoo.com

**Published:** 08 December 2022

**To cite this article (APA):** Annamalay, S., Kittusamy, P., & Arumugum, L. (2022). தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் ‘வேர்ட்வால்’ பயன்பாடு: The Usage of Wordwall in Teaching and Learning Tamil. *Journal of Valartamil*, *3*(2), 1–7. https://doi.org/10.37134/jvt.vol3.2.1.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.2.1.2022

**ஆய்வின் சாரம்:** இந்தச் செயலாய்வு, தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தல் ‘ வேர்ட் வால்’ (Wordwall) எனும் செயலின் மூலம் மிக விரைவாகவும், புதுமையாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இச்செயலி மாணவர்களுக்கு மிகவும் விருப்பான ஒன்றாகும். இச்செயலியானது தரவுகளை விரவில் திரட்டவும் மற்றும் மாணவர்களின் அடைவு நிலையையும் உயர்த்தவும் துணைபுரிகிறது (Idrus, et al, 2021). லாடாங் பத்தாக் ராபிட் தோட்டத் தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வானது ‘Teori Pembelajaran Kognitif’ (Woolfolk,1998) எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னறி தேர்வு, பின்னறி தேர்வு போன்ற ஆய்வுக்கருவிகளைப் பயன்படுத்தி இவ்வாய்வின் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆகவே, இந்த ஆய்வின் முடிவு, தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் வேர்ட் வால் எனும் செயலியானது மிகச் சிறந்த வகையில் மதிப்பீட்டினை மேற்கொள்ள உதவுகின்றது என்பதனை உறுதிபடுத்துகிறது.

**கருச்சொற்கள் :** வேர்ட்வால், தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல், மதிப்பீடு

**Abstarct:** This study was carried out in order to make a rapid and innovative assessment of tamil language learning pedagogy through an activity called 'Wordwall'. This app is very popular for the students. This app helps to gather data in a wide way and also to raise students' achievement levels (Idrus, et al, 2021). Six students from Ladang Pathak Rapid Estate Tamil School were subjected to this study. This study is based on the principle of 'Teori Pembelajaran Kognitif' (Woolfolk, 1998). Data from this study have been collected using tools such as predictive selection and regression selection. Therefore, the results of this study confirm that wordwall, an application in the teaching of Tamil language learning, helps in making the best possible assessment.

**Keywords:** Wordwall, Tamil language learning teaching, evaluation

## முன்னுரை

இன்று உலகமே இணையத்தை மையமாகக் கொண்டு இயங்கிவருகின்றது. ஒரு சில துறைகளின் பயன்பாட்டிலிருந்த இணையம் தற்பொழுது பல துறைகளில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. மேலும், வகுப்பறையில் கற்றல் கற்பித்தலைக் கையாள்வதில் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும், புதுமையான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது நம் நாட்டுக் கல்வி அறிஞர்களின் கூற்றாகும் (Woei, et al. 2021). கற்றலின் மீது மாணவர்களின் ஆர்வத்தை மீட்டெடுக்கவும் ஊக்குவிக்கவும் தொழில்நுட்பம் உதவுகின்றது. இதன் வழி, மாணவர்களின் கல்வி அடைவு நிலையையும் அதிகரிக்க முடியும். அவ்வகையில் நமது கல்வித் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. மேலும், கணினி மற்றும் இணையம் பயன்படுத்தாத கல்வி நிறுவனங்களோ இல்லை என்கிற அளவிற்குத் தொடக்கப் பள்ளி முதல் உயர்க்கல்வி கழகங்கள் வரையில் அனைத்து இடங்களிலும் இதன் பயன்பாடு பெருகி வருகின்றது. மாணவர்களின் புரிதலுக்கு அடிப்படையாக இருப்பது ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தும் உத்தி முறைகளே ஆகும். அவ்வகையில் ‘ வேர்ட்வால்’ எனும் செயலினை அடிப்படையாகக் கொண்டு எளிய முறையில் தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தலில் மதிப்பீடு செய்வதை ஆராய்வதன் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு நோக்கம்

மாணவர்கள் கற்றலில் மேற்கொள்ளும் மதிப்பீட்டினை ஆர்வத்துடன் அணுகி அதனைச் செய்ய தூண்டுவதே இவ்வாய்வின் தலையாய நோக்கமாகும். மேலும், புத்தாக்கச் சிந்தனையின் அடிப்படையில் ஆசிரியர்கள் வேட்வால் எனும் செயலியைப் பயன்படுத்தி மாணவர்களிடையே தமிழ்மொழியின் மீது ஆர்வத்தை ஈர்க்கும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆய்வுச் சிக்கல்

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கலைத் தீர்வுக்கான இவ்வாய்வு நடத்தப்பட்டது. ஆசிரியர் கற்றல் கற்பித்தலில் எதிர்நோக்கிய சில

சிக்கல்களின் அடிப்படையில் இந்த (வேர்ட் வால்) அணுகுமுறையானது செயல்படுத்தப்பட்டது. மேலும், வகுப்பறையில் நடத்தப்படும் ஒவ்வொரு கற்றல் கற்பித்தலில் மதிப்பீடு (Pentaksiran Bilik Darjah) செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்று என மலேசியக் கல்வி அமைச்சின் கூற்றாகும். அவ்வாறு செய்யப்படும் போது ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் புரிதலையும் மற்றும் தரத்தையும் அறிந்து அதற்கேற்றவாறு அவர்கள் செயல்பட முடியும். அதுமட்டுமில்லாமல், ஒரு மதிப்பீடு முடிவடைந்த பிறகு மாணவர்களின் தாள்களை ஆசிரியர் சரிபார்த்து மீண்டும் மாணவர்களிடம் கொடுத்து பிழைகளைக் கலந்துரையாடல் மேற்கொண்டு புரிய வைப்பதற்கு அதிக நேரம் தேவைப்படுகின்றது (செல்வா, இரா. 2017). இதனால், ஆசிரியர்களுக்கு நேர விரயம் ஏற்படுவதோடு அவர்களின் வேலைப் பளுவையும் அதிகரிக்கின்றது. ஆகவே, இச்சிக்கலைக் களையும் நோக்கமானது ‘வேர்ட் வால்’ எனும் செயலியைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் வழி, தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் மதிப்பீட்டினைச் சுலபமாக மேற்கொள்ள இந்தச் செயலி பெரிதும் பங்காற்றுகின்றது; பங்காற்றும் எம்பது உண்மையான ஒன்றாகும்.

**வேர்ட் வால் செயலி (Wordwall)**

தற்போதைய நவீனக் காலத்தில் தொழில்நுட்பம் விரைவாக வளர்ந்து வரும் நிலையில், ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயல்முறைகளை அதற்கு ஏற்றவாறு புதுமையாகத் திட்டமிடுகின்றனர். இது மாணவர்களுக்குப் பல வகையில் பயனளிக்கும் வகையில் அமைகின்றது. வேர்ட் வால் என்பது ஒரு வகையான விளையாட்டின் வழி நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் ஆகும். இதன் மூலம், ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தீர்க்கவும் இயலும்.

மதிப்பீடு என்பது ஒரு சிக்கலான, மற்றும் எளிதில் புரிந்து கொள்ள இயலாத ஒன்று. ஆனால், கல்வி செயல்பாட்டிற்கு மிகவும் அவசியமான ஒன்று. கற்றலில் மாணவர்களின் வளர்ச்சியையும் மற்றும் தரத்தையும் மதிப்பீட்டின் வழி கண்டறியலாம். மதிப்பீடு மாணவர்களின் அறிவுத்திறன், அனுபவம், பின்னணி போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இது மாணவர்களின் தேர்ச்சி நிலையையும் அடைவு நிலையையும் அறிய துணைபுரிகின்றது.

அவ்வகையில், வேர்ட் வால் என்பது ஒரு இணைய அடிப்படையிலான ஒரு விளையாட்டு முறையாகும். இணைய வழியாக நடத்தப்படுவதால் ஆசிரியர்கள் மாணவர்களின் நிலையைத் தீர்மானித்து விளையாட்டு முறையில் கேள்விகளைத் தயார் செய்யலாம். மேலும், வேர்ட் வால் Visual Education Ltd எனும் ஒரு ஆங்கில நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. கற்றல்

கற்பித்தலில் மதிப்பீட்டு முறைகளை உருவாக்க விரும்பும் ஆசிரியர்களுக்கு இச்செயலியின் பயன்பாடு மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

### ‘வேர்ட் வால்’ (Wordwall) விளக்கம்

‘வேர்ட் வால்’ செயலியானது தகவல் தொழில்நுட்பம் சார்ந்து தயாரித்துச் செயல்படுவதால் இது மாணவர்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. அதுமட்டுமில்லாமல், இது மாணவர்களிடையே சலிப்பைப் போக்கி பாடத்தின் மீதான அவர்களின் ஆர்வத்தையும் மேம்படுத்தி மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் சூழலினை உருவாக்குகிறது. தொடர்ந்து, இச்செயலி முழுவதுமாகத் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டு முறையில் செயல்படுவதால் தற்கால மாணவர்களின் தொழில்நுட்பம் தொடர்பான அறிவிற்கு ஈடுகொடுக்கும் வகையில் இச்செயலி அமைகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

### வேர்ட் வாலில் கேள்விகளை உருவாக்கும் முறை

இப்பகுதியில் ஆசிரியர் முதற்கட்டமாக ‘create activity’ எனும் பகுதியைக் கிளிக் செய்துக் கொள்ளவும். பின், ‘pick a template’ இல் ஆசிரியரின் கற்பித்தலுக்கு ஏற்ற டெம்ப்ளேட்டைத் தேர்வு செய்து கொண்டு மாணவர்களுக்கான கேள்விகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இக்கேள்விகளை ஆசிரியர்கள் மடிக்கணினியைப் பயன்படுத்தி உருவாக்கிச் சேமிக்கலாம். இவ்வாறு, மடிக்கணினியைப் பயன்படுத்திச் செய்வதால் ஆசிரியர்களுக்குக் கேள்விகளைத் தயாரிக்க அதிக நேரம் தேவைப்படாது என்பது உறுதியான ஒன்றாகும். அதுமட்டுமில்லாமல், ஆசிரியரின் பாடத்தலைப்பிற்கு ஏற்றவாறு கேள்விகள் பல டெம்ப்ளேட்களில் அச்செயலியில் கிடைக்கப் பெறும்.




**படம் 1:** கேள்விகளை உருவாக்குதல்

## மதிப்பீடு செய்தல்

அடுத்த படியாக, அக்கேள்விகளை மாணவர்களுக்கு புலனத்தில் இணைப்பின் வழி வழங்கலாம். இம்மதிப்பீடு பகுதியை மாணவர்கள் பள்ளியில் அல்லது வீட்டிலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்யலாம்.




**படம் 2:** மதிப்பீடு

## புள்ளிப்பட்டியல்

இறுதி படியாக, மதிப்பீட்டைச் செய்து முடித்த பிறகு மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கப் பெற்ற புள்ளிகளை மதிப்பீட்டின் இறுதில் அறிந்து கொள்ளலாம். ஆசிரியர்கள் மாணவர்களுடன் கேள்விகளைக் கலந்துரையாடலாம்.




**படம் 3:** கிடைக்கப் பெற்ற புள்ளிகள்

**மாணவர்களின் அடைவுநிலை**

ஆண்டு இரண்டு மாணவர்களின் புரிதலைச் சோதிக்க ஆசிரியர் ஆகஸ்ட் மாத சோதனைத் தாளிலிருந்து பத்து கேள்விகள் அடங்கிய தாளை வழங்கி மாணவர்களைச் சோதித்தார். மாணவர்களின் ஈடுபாடும் அடைவிநிலையும் ஆசிரியரால் குறிப்பெடுக்கப்பட்டது. பிறகு, ஒரு வாரம் கழித்து ஆசிரியர் மீண்டும் அதே கேள்விகளை வேர்ட் வால் செயலியின் மூலம் ஆசிரியர் மதிப்பீட்டினை மேற்கொண்டார். மாணவர்களின் அடைவு நிலை ஆசிரியரால் குறிப்பெடுக்கப்பட்டது.

| **எண்** | **மாணவர்கள்** | **கேள்வித்தாள்** (10%) | **வேர்ட் வால் செயலி** (10%) |
|---|---|---|---|
| 1 | மாணவர் 1 | 4/10 | 9/10 |
| 2 | மாணவர் 2 | 5/10 | 10/10 |
| 3 | மாணவர் 3 | 3/10 | 8/10 |
| 4 | மாணவர் 4 | 5/10 | 9/10 |
| 5 | மாணவர் 5 | 4/10 | 9/10 |
| 6 | மாணவர் 6 | 3/10 | 9/10 |

**அட்டவணை 1:** மாணவர்களின் அடைவுநிலை

**முடிவுரை**

பல மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இந்நவீனக் காலகட்டத்திற்கு ஏற்றவாறு கல்வியிலும் பல உருமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அவ்வகையில் ஓர் ஆசிரியர் கற்பித்தல் குறித்து தங்களின் அறிவினை வளர்த்துக் கொள்ளாமல் தொடர்ந்து வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுவது மாணவர்களிடையே பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று புரிந்துக்கொண்டு அதற்கு ஏற்றாற்போல் தங்களின் கற்பித்தல் தொடர்பான அணுகுமுறைகளையும் சிந்தனைகளையும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டு. தொடர்ந்து, கற்பித்தலை தற்போதைய காலமாற்றத்திற்கு ஏற்றவாறும் மாணவர்களின் நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்வது சிறப்பான ஒன்றாகும். ஆகவே, இந்த வேர்ட் வால் அணுகுமுறையானது தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டில் ஒரு முறை என்று கூறலாம்.

## துணைநூல் பட்டியல்

Idrus, N. W., Yulianti, D., Suparman, U., & Arief, Z. A. (2021). Pemanfaatan media wordwall dalam peningkatan perbendaharaan kosakata (vocabulary) pada pembelajaran bahasa Inggris. *Aksara: Jurnal Bahasa dan Sastra*, *22*(2), 376-387.

Woei, R. L. J., Bikar, S. S., Rathakrishnan, B., & Rabe, Z. (2021). Integrasi Permainan Media Word Wall dalam Pendidikan Sejarah. *Malaysian Journal of Social Sciences and Humanities (MJSSH)*, *6*(4), 69-78.

Woolfolk, A. E. (1998). Educational psychology. Boston: Allyn & Bacon.

செல்வா, இலெ. (2017). தமிழ்க் கற்றல் கற்பித்தலில் 'சொக்ரேடிவ்' செயலியின் பயன்பாடு. மொழித்திறன்களும் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பமும். புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகம்.

நரேஸ், தே. (2017). 'குயிஸ்லெட்' கற்றல் கருவி மூலம் தமிழ் மொழி கற்பித்தல். மொழித்திறன்களும் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பமும். புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகம்.

Ponniah, Kartheges, Kingston Pal Thamburaj, and S. J. I. SamuvelI. "Language attitude among Tamil language teachers." *International Journal of Advanced and Applied Sciences* 4.6 (2017): 142-147.